# உண்மையை வெளிப்படுத்துதல்



ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை)

வாக்களிக்கப்பட்ட மஸீஹ்,மஹ்தி

# உண்மையை வெளிப்படுத்துதல்

ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை)

வாக்களிக்கப்பட்ட மஸீஹ், மஹ்தி

வெளியிடுவோர்:
நஸாரத் நஷ்ரோ இஷாஅத்
சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா, காதியான்
குர்தாஸ்பூர், பஞ்சாப் - 143 516

Tamil Translation of the Urdu Book


# Sachchayi Ka Izhaar

# உண்மையை வெளிப்படுத்துதல்


| | | |
|---|---|---|
| Written by | : | Hazrat Mirza Ghulam Ahmad[as]<br>(Promissed Messiah & Mahdi) |
| Translated by | : | J.S. Saleem Ahmad |
| Composed by | : | A. Abdul Nizar |
| Year | : | 2024 |
| Copies | : | 500 |
| Published by | : | Nazarat Nashr-o- Isha'at<br>Qadian - 143 516<br>Gurdaspur<br>Punjab, India |
| Printed at | : | Fazl-e-Umar Printing Press<br>Gurdaspur, Qadian - 143 516<br>Punjab |

Noorul Islam Toll Free No : 1800 103 2131

Tamil Toll Free No : 1800 425 40000



ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை)
வாக்களிக்கப்பட்ட மஸீஹ், மஹ்தி

## நூலாசிரியரைப் பற்றி...

*வாக்களிக்கப்பட்ட மஸீஹும், உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் 1835 -ஆம் ஆண்டு இந்தியாவிலுள்ள காதியான் எனும் சிற்றூரில் பிறந்தார்கள். தமது சிறு வயதிலிருந்தே இறை வணக்கத்திலும், பிரார்த்தனையிலும், திருக்குர்ஆன், பிற மத வேதங்களைக் கற்பதிலும் அன்னார் தம்மை அர்ப்பணித்துக் கொண்டார்கள். அனைத்து திசைகளிலிருந்தும் தாக்குதலுக்கு உள்ளாகும் இஸ்லாத்தின் பரிதாப நிலையைக் கண்டு, அன்னார் மிகவும் வேதனை அடைந்தார்கள். இஸ்லாத்தைப் பாதுகாப்பதற்காகவும், அதன் போதனைகளை தூய, பரிசுத்த வடிவில் வழங்குவதற்காகவும், அன்னார் தொண்ணூறுக்கும் மேற்பட்ட புத்தகங்களையும், ஆயிரக்கணக்கான கடிதங்களையும் எழுதியதுடன், ஏராளமான மார்க்க விவாதங்களிலும் பங்கேற்றார்கள். நல்லொழுக்க, ஆன்மிக முழுமைத் தன்மையை அடையும் பொருட்டு, மனிதனுக்கு இறைவனுடன் தொடர்பை ஏற்படுத்தும் ஓர் உயிருள்ள மார்க்கமாக இஸ்லாம் திகழ்கிறது என அன்னார் வாதித்தார்கள்.*

*ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களுக்கு, இளமைப் பருவத்திலிருந்தே இறைவன் புறமிருந்து கனவுகள், ஆன்மிகக் காட்சிகள், இறை வெளிப்பாடுகள், முன்னறிவிப்புகள் வரத் தொடங்கின. 1889 -ல், இறை கட்டளையின்படி அன்னார் பைஅத் வாங்கத் தொடங்கினார்கள். ஒரு தூய ஜமாஅத்திற்கான அடித்தளமிட்டார்கள். பின்னர் இறை வெளிப்பாடுகள்*

அதிகமாக வரத் தொடங்கின. மேலும், பல்வேறு மார்க்கங்களில், வெவ்வேறு பெயர்களில் முன்னறிவிக்கப்பட்ட இறுதிக் காலத்தின் சீர்திருத்தவாதி தாமே என்று இறை கட்டளைக்கு இணங்க வாதித்தார்கள். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் முன்னறிவித்த அந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ், மஹ்தி தாமே என்றும் அன்னார் வாதித்தார்கள். அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தற்போது இருநூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் நிறுவப்பட்டுள்ளது.

1908 -ஆம் ஆண்டில் அன்னாரது மறைவுக்குப் பின்னர், திருக்குர்ஆன், ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கிணங்க, அன்னாரது வருகையின் நோக்கத்தை முழுமைப்படுத்தும் பொருட்டு, கிலாஃபத் அமைப்பு (கலீஃபாவை நியமித்தல்) நிறுவப்பட்டது. ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஐந்தாவது கலீஃபாவாகவும், உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தற்போதைய தலைவர் ஆகவும் இருந்து வருகின்றார்கள்.

# பதிப்புரை

வாக்களிக்கப்பட்ட மஸீஹும், உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமாகிய **ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை)** அவர்கள் எழுதிய '**சச்சாயீகா இஸ்ஹார்**' என்ற நூலின் ஆங்கில மொழியாக்கமாகிய '**The Truth Revealed**' என்ற நூலை தமிழ்நாடு புத்தக ரிவியூ கமிட்டியின் தலைவர் **ஜனாப் J.S. சலீம் அஹ்மது சாஹிப்** தமிழாக்கம் செய்து தந்துள்ளார்கள். அது '**உண்மையை வெளிப்படுத்துதல்**' என்ற பெயரில் தமிழில் வெளியிடப்படுகிறது.

இதை, சரிபார்ப்புக் குழு உறுப்பினர்களான **ஜனாப் A. நாஸிர் அஹ்மது சாஹிப்**, **ஜனாப் S. செய்யிது அன்வர் சாஹிப்** ஆகியோர் ஆங்கில மொழியாக்க நூலுடனும், **மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மது சாஹிப் H.A.**, **முஅல்லிம் M. ஷாஜஹான் சாஹிப்**, **மவ்லவி A.P.A. தாரிக் அஹ்மது சாஹிப்** ஆகியோர் உருது மூல நூலுடனும் சரிபார்த்து திருத்தங்களை செய்துள்ளார்கள்.

அவர்கள் அனைவருக்கும் அல்லாஹ் மேலான வெகுமதியை வழங்குவானாக! ஆமீன்.

வஸ்ஸலாம்

எளியவன்
***ஹாஃபிஸ் மக்தூம் ஷரீஃப்***
நாஸிர் நஷ்ரோ இஷாஅத்
காதியான்

## உண்மையை வெளிப்படுத்துதல்

### என்ற பெயரைக் கொண்ட சிறு நூல்

*இதில் அமிர்தசரஸைச் சார்ந்த கிறித்தவத் தலைவர் அப்துல்லாஹ் ஆத்தம் என்பவர், (தாம்) தோல்வி அடைந்தால் இஸ்லாத்தை ஒப்புக் கொள்வதாகக் கூறிய ஒப்புதல் வாக்குமூலம் இருக்கிறது. மேலும் இதில் அரேபியா, சிரியா நாடுகளின் படித்து பட்டம் பெற்ற ஆலிம்கள் இந்த எளியவனை உண்மைப்படுத்தியிருக்கிறார்கள். (நூலாசிரியர்)*

*அமிர்தசரஸிலுள்ள ரியாஸே ஹிந்த் எனும் பதிப்பகத்தில் அச்சாகியுள்ளது.*

# பொருளடக்கம்


பட்டாலாவைச் சேர்ந்த ஷேக் மவ்லவி முஹம்மது ஹுஸைன் அவர்களின் இஷாஅத்துஸ் ஸுன்னா பத்திரிகை -யிலிருந்து பாதிரிமார்களுக்கு மார்க்க விஷயங்களில் மிகப்பெரும் உதவி கிடைத்தது பற்றிய குறிப்பு - 11

பொது அறிவிப்பு - 16

டாக்டர் மார்ட்டின் கிளார்க்கின் ஒரு சந்தேகத்திற்கான நிவர்த்தி - 17

அரபி அறிஞர் இந்த எளியவனுக்கு எழுதிய அன்பு மடல் - 22

அரபி ஆலிமிடமிருந்து வந்த அன்பு மடலுக்கு இந்த எளியவனின் பதில் - 25

மக்காவிலிருந்து அரபு அறிஞர் ஒருவர் எழுதிய கடிதம் - 30

அரேபியாவைச் சேர்ந்த ஷரீஃப் முஸ்தஃபா சாஹிப் அவர்களது மகன் செய்யிது அலி சாஹிப் எனும் ஓர் அரபு அறிஞர் எழுதிய கடிதத்தின் சுருக்கம் - 32

டாக்டர் மார்ட்டின் கிளார்க் சாஹிப் மற்றும் கிறித்தவர்களின் பிரதிநிதியான திரு. அப்துல்லாஹ் ஆத்தம் விவாதத்தில் வீழ்த்தப்படும் நிலையில், இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதாக அவர் அளித்த வாக்குறுதி - 33

திரு. அப்துல்லாஹ் ஆத்தம் சாஹிப் மே 9, 1893 அன்று அமிர்தசரஸிலிருந்து எழுதிய கடிதத்தின் நகல் - 34

அப்துல் ஹக் கஸ்னவி வெளியிட்ட அறிவிப்புக்குப் பதில் அளிக்கும் விதமாக முபாஹலாவிற்கான ஓர் அழைப்பு - 35

இறுதிச் சான்று - 39

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ
نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ [1]

## பட்டாலாவைச் சேர்ந்த ஷேக் மவ்லவி முஹம்மது ஹுஸைன் அவர்களின் இஷாஅத்துஸ் ஸுன்னா பத்திரிகையிலிருந்து பாதிரிமார்களுக்கு மார்க்க விஷயங்களில் மிகப்பெரும் உதவி கிடைத்தது பற்றிய குறிப்பு

1893 -ஆம் ஆண்டு மே 12 -ஆம் தேதி லூதியானாவில் 'அமெரிக்கன் மிஷன் பிரஸ்'-ல் அமிர்தசரஸைச் சார்ந்த கிறித்தவ மெடிக்கல் மிஷனரி டாக்டர் ஹென்றி மார்ட்டின் கிளார்க் M.D என்பவரின் சார்பாக இந்த எளியவனுக்கு எதிராக ஒரு பிரசுரம் அச்சாகியிருக்கிறது. அதில் மவ்லவி என்று பிரபல்யமாக அறியப்படும், பட்டாலாவைச் சேர்ந்த ஷேக் முஹம்மது ஹுஸைன் என்பவருக்கு ஒரு கோணத்தில் நன்றி தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அது உண்மையில், கிறித்தவர்கள் (அவருக்கு) நன்றி செலுத்தக்கூடிய இடமாக இருந்தது. ஏனெனில், டாக்டர் சாஹிப் இந்த எளியவனுக்குப் போட்டியாக இஸ்லாம் மற்றும் கிறித்தவ மதத்தை மதிப்பீடு செய்யவும், ஆய்வுக்கு உட்படுத்தவும், உண்மையையும் பொய்யையும் பிரித்தறிவதற்காவும் விவாதம் செய்ய ஒப்புக்

1. அளவற்ற அருளாளனும் மேன்மேலும் கருணை காட்டுபவனு -மாகிய அல்லாஹ்வின் பெயரால்....

நாம் அவனையே புகழ்கின்றோம். மாட்சிமைமிக்க அவனது தூதர் (ஸல்) அவர்கள் மீது அருள்கள் உண்டாவதாக என நாம் துஆ செய்கின்றோம் - வெளியீட்டாளர்.

கொண்டிருந்தார்தான்! ஆனால், அவரது முடிவைக் குறித்து ஆழ்ந்து சிந்தித்ததன் பின்னர் அவர் சிறிது அச்சமடைந்து போனார். இதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. உண்மை என்னவெனில், மனிதனை கடவுளாக ஆக்கும், இதுபோன்ற ஒரு கொள்கையை உன்னிப்பாக ஆய்வு செய்யும்பொழுது, அந்தக் கொள்கையை ஏற்றுக் கொண்டவர்களின் உடல் எப்போதும் மிகவும் நடுங்கி விடுகின்றது. மனிதன் மனிதன்தான்; இறைவன் இறைவன்தான். புனிதத் தன்மைமிக்க, சர்வ வல்லமைமிக்க இறைவனுடன் மண்ணுக்கு என்ன ஒப்புமை இருக்க முடியும்?

சுருக்கமாக, இவ்வாறு இஸ்லாத்தின் நேரான வழிக்கு எதிரில் கிறித்தவ திட்டங்களின் அனைத்து முலாம் பூச்சுகளும் அம்பலப்பட்டு விடக் கூடாதே என்பதற்காக பாதிரிமார்கள் அமைதியிழந்தனர். எனவே எங்கள் இருவருக்குமிடையே நடைபெறவிருந்த விவாதத்தை ஒத்திப்போடுவதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியில்லாமல் ஆனது. இதனால் இந்தப் பாத்திரம் எப்படியாவது நீங்கி விட்டால் மிக நல்லது என்று முயற்சி செய்தனர். எனவே, அவர்கள் விரக்தியுற்றிருந்த அவ்வேளையில், ஷேக் சாஹிப் புறமிருந்து அக்கிறித்தவர் -களுக்கு நன்கு உதவி கிடைத்தது. இவர் உதவி செய்யும் பொருட்டு தாமே இரகசியமாக அவர்களை அணுகினார் என்றும் கூட நமக்கு அநேகமாக யூகம் ஏற்படுகின்றது.

டாக்டர் மார்ட்டின் கிளார்க் எனக்கு அனுப்பிய ஒரு கடிதத்தின் அடிப்படையிலேயே நான் இந்த அனுமானத்திற்கு

வருகிறேன். ஏனெனில், அக்கடிதத்தில் அவர், ‘இஷாஅத்துஸ் ஸுன்னா’ பத்திரிகையின் வாக்கியங்களை எழுதியிருந்தார். அவரது வாக்கியத்திற்கும் ஷேக் சாஹிபின் வாக்கியத்திற்கும் மிகவும் ஒப்புமை இருக்கிறது. இவ்விஷயத்தில் ஷேக் சாஹிபை சத்தியப் பிரமாணம் செய்யுமாறு கூறினால், அவர் இவ்விஷயத்தை அநேகமாக மறுக்கவும் மாட்டார் என நான் நம்புகிறேன்.

மேலும் 1893-ஆம் ஆண்டு மே 12-ஆம் நாள், நூர் அ.ஃ.ப்ஷான் இணைப்புடன் வெளிவந்த பிரசுரம் தற்போது நம் கையில் இருக்கிறது. அதை கவனமாகப் பார்க்கும்போது அது சாட்சி பகர்கின்றது. அதில் எழுதப்பட்டுள்ளதாவது:

“(ஜன்டியாலாவில் வசிக்கக்கூடிய) நீங்கள், முஸ்லிம் என்று கருதுவதற்குக் கூட கடினமாக இருக்கின்ற ஒரு நபரை (அதாவது இந்த எளியவனை) இவ்விவாதத்திற்கு முன்னிறுத்தியுள்ளீர்கள். நீங்கள் எந்த கற்பனைகளில் மூழ்கி இருக்கிறீர்கள்? பஞ்சாப் மாநிலத்திலும், இந்தியா நெடுகிலுமுள்ள முஸ்லிம் ஆலிம்கள் மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிப் காதியானி அவர்களுக்கு எதிராக வெளியிட்ட மார்க்கத் தீர்ப்புகளை நீங்கள் பார்க்கவில்லையா?

*(மேற்குறிப்பிட்ட அந்த மார்க்கத் தீர்ப்புகளை இங்கு டாக்டர் கிளார்க் இவ்வாறு குறிப்பிடுகிறார்.)*

*வினா எழுப்பியவருக்கு நாம் தந்த அனைத்து பதில்களும், காதியானி தொடர்பாக நாங்கள் எடுத்துள்ள அனைத்து மார்க்கத் தீர்ப்புகளும் சரியானவையே ஆகும். அவற்றிற்கு திருக்குர்ஆன்,*

*ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் நடைமுறை, உம்மத்தின் ஆலிம்களின் கூற்றுகள் ஆகியவை சாட்சிகளாக இருக்கின்றன. இப்படிப்பட்ட தஜ்ஜாலை, பெரும் பொய்யரை விட்டு விலகியிருப்பது அனைத்து முஸ்லிம்களுக்கும் கடமையாகும். முஸ்லிம்களிடத்தில் பரஸ்பரம் நடந்து கொள்வதைப் போன்று மார்க்க விவகாரங்களில் அவருடன் நடந்து கொள்ளக் கூடாது. மேலும், அவரது தோழமையை நாடிச் செல்லவோ, அவருக்கு முதலில் ஸலாம் கூறவோ, அவரை இஸ்லாமிய நடைமுறையிலான விழாக்களுக்கு அழைக்கவோ அல்லது அவரது அழைப்பை ஏற்கவோ, அவர் பின்னால் நின்று தொழவோ, அவரது ஜனாஸா தொழுகையை தொழவோ கூடாது.*

*அவர் மார்க்கத் திருடர் ஆவார். நோய்களை அதிகமாக்குபவர் ஆவார். அவர் தஜ்ஜால், பெரும் பொய்யர், சாபத்திற்குரியவர், மார்க்கத்தை இழந்தவர், இஸ்லாத்தின் வட்டத்தை விட்டு வெளியேறியவர், நிராகரிப்பவர், இன்னும் கூறுவதென்றால் மாபெரும் நிராகரிப்பாளர், அசுத்தமானவர், சூழ்ச்சிக்காரர், இப்லீஸால் வழிகெடுக்கப்பட்டவர், மற்றவர்களை வழிகெடுப்பவர், சுன்னத் ஜமாஅத்தை விட்டும் வெளியேறியவர், மிகப் பெரும் தஜ்ஜால், இன்னும் கூறுவதென்றால் தஜ்ஜாலின் சிறிய தந்தை, மேலும் மார்க்கத்தின் மூலமாக உலகத்தை சம்பாதிப்பவர்.*

முழு விவரங்களுக்கு மவ்லவி அபூ ஸயீது முஹம்மது ஹுஸைன் சாஹிபின் இஷாஅத்துஸ் ஸுன்னதுன் நபவிய்யா என்ற நூலை 1 ரூபாய் 50 பைசா கொடுத்து வாங்கிப் படித்துக் கொள்ளலாம். இது லாஹூரில் கிடைக்கும். நீங்கள் இப்போது வரை இந்த நூலைப் பார்க்கவில்லை. உங்களுக்கு வியப்பிற்குரிய கவனக்குறைவு ஏற்பட்டிருக்கிறது! இவ்வாறு

இருப்பது என்னைத் திகைக்க வைக்கிறது. அந்தோ! நீங்களும், ஜண்டியாலாவின் முஸ்லிம் மக்களும், இப்படிப்பட்ட ஒருவரை மார்க்கத் தலைவராகத் தேர்ந்தெடுத்ததன் மூலம் பெரும் அவமதிப்பை ஏற்படுத்தி விட்டீர்கள். ஏனென்றால், அவரின் ஜனாஸா தொழுகையில் கூட எவரும் கலந்து கொள்ள முடியாது. ஆஹா! சாஹிபே!! என்னே உங்கள் நல்லெண்ணம்!!!"

ஒரு கிறித்தவ பாதிரி, பட்டாலவி சாஹிபிடமிருந்தும், அவருடைய இஷாஅத்துஸ் ஸுன்னா பத்திரிகையிலிருந்தும் எந்த அளவு பயனடைந்துள்ளார் என்பதையும், என்னை மறுப்பவர்கள், எதிரிகளுக்கு என்னென்ன சந்தர்ப்பங்களைக் கொடுத்து விட்டார்கள் என்பதையும் குறித்து சிந்திப்பது அவசியமாகும். (ஆனால் இதைக் கூறுவதற்கு முன்னால்) ஜண்டியாலாவின் உறுதியான ஈமான் கொண்ட மக்கள் இஷாஅத்துஸ் ஸுன்னாவை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டிருந்த, குழப்பத்தால் நிறைந்த இந்தப் பிரசுரத்தைப் பார்த்து, அவர்களது மன உறுதியில் எந்தத் தடுமாற்றமும் ஏற்படவில்லை என்பது மகிழ்ச்சிக்குரிய தருணமாகும். மியா(ன்) முஹம்மது பக்ஷ் சாஹிப் அவர்கள் ஜண்டியாலாவில் கிறித்தவர்களிடம், "எந்த மதமும் கருத்து வேறுபாடுகளை விட்டும் அப்பாற்பட்டதாக இல்லை; கிறித்தவமும் இதற்கு அப்பாற்பட்டு இல்லை. இஸ்லாத்திற்கு ஆதரவளிக்கும் ஒரு முஸ்லிமை கா.ஃபிர் என்று கூறும் மவ்லவிமார்களை, குழப்பம் விளைவிக்கக் கூடியவர்கள் என்றே நாம் கருதுகிறோம்" என்ற வாயை மூட வைக்கின்ற பதிலை முன் வைத்தார்.

## பொது அறிவிப்பு

எமது சார்பாக சான்றை முழுமைப்படுத்தும் விதமாக ஓர் அரபி விளக்கவுரை மற்றும் கஸீதா ஆகியவற்றிற்குப் போட்டியாக எழுதுவது தொடர்பாக நான் எழுதிய கடிதத்துக்கு ஒரு குறிப்பிட்ட தேதிக்குள் கண்டிப்பாக பதிலளிப்பேன் என்றும், வாக்கு மீறமாட்டோம் என்றும் இஷாஅத்துஸ் ஸுன்னாவின் ஆசிரியர் ஷேக் பட்டாலவி சாஹிப் இரு முறை உறுதியாக சத்தியம் செய்திருந்தார். இப்போது அவரது இரண்டு வாக்குறுதிகளின் இரு தேதிகளும் கடந்து 16 நாட்கள் ஆகி விட்டன. இன்னும் எத்தனை நாட்கள் கூடுதலாக ஆகும் என்பதை இறைவனே நன்கறிவான். ஷேக் சாஹிப் மீண்டும் மீண்டும் வாக்குறுதி கொடுப்பதும், அவர் அவற்றை மீறுவதும், அவர் பிரச்சனையில் இருப்பதை தெளிவாக உணர்த்துகின்றன.

மூன்று நாட்களுக்கு முன்பு அமிர்தசரஸைச் சார்ந்த மவ்லவிகளிடமிருந்து ஒரு சுருக்கமான தூதுச் செய்தியை நான் பெற்றேன். அதில் நான் டாக்டர் கிளார்க்குடன், இயேசுவின் வாழ்க்கையும் மரணமும் என்ற தலைப்பில் விவாதிப்பதாக இருந்தால், நிச்சயமாக அம்மவ்லவிமார்கள் அவருடைய அணியில் இணையப் போவதாக நேரடியாக தெரிவித்திருந்தனர். எனவே, நான் ஷேக் சாஹிபுக்கும் அவரைச் சார்ந்தோருக்கும் ஒரு பொது அறிவிப்பைச் செய்கிறேன். இன்னும் கூறுவதென்றால் நான் அவர்களுக்கு ஓர் அறைகூவல் விடுக்கின்றேன். அவர்கள் தம் வலிமையைக் கொண்டு என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளட்டும். நான் டாக்டர் கிளார்க்குடன் இதே தலைப்பில்

நிச்சயமாக வாதம் செய்வேன். எந்த வகையில் அவர்கள் அவருக்கு உதவி செய்ய விரும்புகிறார்களோ அவ்வாறு செய்ய அவர்களுக்கு முழு உரிமை உண்டு.

وَاعْلَمُوْا اَنَّ اللّٰهَ يُخْزِى الْكَاذِبِيْنَ۔ وَاٰخِرُ دَعْوَانَا اَنِ الْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ[2]

## டாக்டர் மார்ட்டின் கிளார்க்கின் ஒரு சந்தேகத்திற்கான நிவர்த்தி

1893-ஆம் ஆண்டு மே மாதம் 12-ஆம் நாள் நூர் அ.ஃப்ஷான் லூதியானா பத்திரிகை இணைப்பில் டாக்டர் சாஹிப் வெளியிட்ட தனது பிரசுரத்தின் அடிப்படையில், இஸ்லாத்தின் ஆலிம்கள் என அறியப்பட்டவர்கள் இந்த எளியவனை கா.ஃபிர் என்று குறிப்பிடுகின்றனர் என்ற ஷேக் பட்டாலவி சாஹிபின் நிலைப்பாட்டினால் டாக்டர் மார்ட்டின் கிளார்க் ஏமாற்றம் அடைந்தார். அல்லது இவரே மற்றவர்களை ஏமாற்ற விரும்பியிருக்கிறார் என்று புரிந்து கொள்வது, அறிவுக்குப் பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது. எனவே, மார்க்க அறிவும், இஸ்லாமிய நடைமுறையும் நன்கறிந்த, நம்பிக்கையின் ஒளி அருளப் பெற்ற சுமார் 40 ஆலிம்கள் என்னுடன் இருக்கின்றனர் என்பதை மக்களுக்குத் தெரியப் -படுத்துவதற்காக, இப்போது நான் இதை எழுதுவது அவசியம் எனக் கருதுகிறேன். ஆனால், எனது எதிரிகளுடன் அணிவகுத்து நிற்கும் மவ்லவிகளுள் பெரும்பாலாரின் நிலை இதற்குத்

2. நிச்சயமாக அல்லாஹ் பொய்யர்கள் மீது இழிவை ஏற்படுத்துவான் என்பதை தெரிந்து கொள்ளுங்கள். அனைத்துலகங்களுக்கும் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் - வெளியீட்டாளர்.

தலைகீழாகும் என்பதுதான் உண்மை. அவர்கள் பெயரளவில் மட்டுமே மவ்லவிகளாக இருக்கின்றனர். அவர்கள் மார்க்க நடைமுறை அறிவும், சிறப்புகளும் அறவே இல்லாதவர்கள். இதுவொரு மிகைப்படுத்தப்பட்ட கூற்று என டாக்டர் மார்ட்டின் கிளார்க் கருதினால், ஒரு நல்ல, நியாயமான முடிவிற்கு வருவதற்காக, என்னை எதிர்க்கும் ஆலிம்களுக்கும், என்னைச் சார்ந்த ஆலிம்களுக்கும் இடையேயான ஒரு கூட்டத்தில் அல்லது விவாதத்தில் அவர் கலந்து கொண்டு பார்த்துக் கொள்ளட்டும். உண்மையாகவே இதைக் கூறுகிறேன்.

வெகு நாட்கள் கழித்து நடக்கப் போவதைப் பற்றி அல்ல. மாறாக 1893 -ஆம் ஆண்டு ஜூன் 15 அன்று, எனது எதிரிகளுள் ஒருவரான மவ்லவி குலாம் தஸ்தகீர் மற்றும் அவரது இயல்பை ஒத்த அவருடன் இணைந்திருக்கும் லாஹூரின் அனைத்து ஆலிம்களுக்கும், மறுபுறம் என்னைச் சேர்ந்த ஓரிரு அறிஞர்களுக்கும் இடையே அத்தகைய ஒரு விவாதத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பிறகு, டாக்டர் கிளார்க் என்னும் இந்தப் பாதிரி இவ்விரு பிரிவுகளில் எந்தப் பிரிவைச் சார்ந்த ஆலிம்கள் நேர்மையாளர்களாகவும், அறிவிற் சிறந்தவர் -களாகவும் இருக்கிறார்கள் என்பதையும், எந்தப் பிரிவைச் சார்ந்தவர்கள் மவ்லவி என்ற பட்டத்தை மட்டும் பெயரளவில் சுமந்து கொண்டு, உண்மையில் குழப்பத்திலும், அறியாமையிலும் இருக்கிறார்கள் என்பதையும், நேரில் பார்ப்பது நம்புவதற்குச் சமம் என்று ஒரு பழமொழி கூறுவது போன்று, அவரே தன் கண்களால் கண்டு கொள்ளட்டும். ஒரு

கருமியாகிய எதிரியின் எழுதுகோலிலிருந்து வெளிவருபவை அறிவாளியின் பார்வையில் ஒருபோதும் மதிப்பிற்கும், கண்ணியத்திற்கும் உரியவையாக இருப்பதில்லை. மாறாக, ஒவ்வோர் உண்மையும் நன்கு ஆராய்ந்த பிறகே வெளிப்படுகிறது.

அது மட்டுமின்றி, புனித மக்காவும், மதீனாவும் - அல்லாஹ் அவ்விரண்டையும் கண்ணியத்திலும், சிறப்பிலும், அருளிலும் அதிகமாக்குவானாக - இஸ்லாத்தின் பிரசித்தி பெற்ற ஆலிம்களின் இல்லமாக இருந்து வருகின்றன என்பதையும், இந்த அரபு நாடே குறிப்பாக மக்காவும் மதீனாவும் மார்க்கத்தின் இல்லமாக கருதப்படுகின்றது என்பதையும் டாக்டர் கிளார்க் நன்கு அறிவார். இத்தகைய புனித நகரங்களின் முக்கிய பகுதியில் வசித்து வரும் ஆலிம்கள் இந்த எளியவனோடு இணைந்து வருகின்றனர். உதாரணத்திற்கு மூன்று நல்லடியார்கள் எழுதிய கடிதங்களை முன்மாதிரியாக கீழே எழுதுகிறேன்: (இக்கடிதங்களில் முதலில் வந்த ஒரு கடிதம், ஆயினயே கமாலாத்தே இஸ்லாம் என்ற இந்த எளியவனின் நூல் பற்றியும், தப்லீக் என்று தலைப்பிடப்பட்டுள்ள பகுதி பற்றியதும் ஆகும். அரேபிய அறிஞர் ஒருவருக்கு இது ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியதைக் குறித்து அக்கடிதம் பேசுகிறது. நான் குறிப்பிடும் இந்த மதிப்பிற்குரிய மனிதர் அரபு நாட்டிலுள்ள ஒரு பிரசித்தி பெற்ற கல்லூரியில் அரபி இலக்கியம் கற்பித்து வருகிறார்.)

இது தொடர்பாக, எனது மதிப்பிற்குரிய சகோதரர் மவ்லவி ஹா.ஃ.பிஸ் முஹம்மது ய.ஃ.கூப் சாஹிப், டெஹ்ராடூன் நகரிலிருந்து எழுதுகிறார்:

தாங்கள்தான் இக்காலத்தின் இமாம் என்றும், அல்லாஹ்வால் உதவி செய்யப் பெற்றவர் என்றும் நான் நம்புகிறேன். அல்லாஹ் இந்த ஆலிம்களை தோல்வி அடையச் செய்து, அவர்களை உங்களுக்காக பணியாற்றுபவர்களாக ஆக்குவான் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. உங்களை எதிர்ப்பவன் ஒருபோதும் வெற்றி பெற முடியாது. நான் உங்களது சேவகனாகவே வாழ்ந்து வரவும், இதே நிலையில் மரணிக்கவும் அல்லாஹ்விடம் மன்றாடி பிரார்த்தனை செய்கிறேன். இறைவா! நீ அவ்வாறே நிறைவேறச் செய்வாயாக. (நான் இதை எழுதும் போது) என்னுடன் அரபி அறிஞர் ஒருவர் இருக்கின்றார். அவர் சிரியா நாட்டின் செய்யிது குடும்பத்தைச் சார்ந்தவர். இலக்கிய அறிஞர் ஆவார். அவர், ஆயிரக்கணக்கான அரபிக் கவிதைகளை மனனம் செய்த அறிவாற்றல் மிக்க ஓர் எழுத்தாளர். தங்களைக் குறித்து அவரிடம் பேசப்பட்டது. அவர் மாபெரும் அறிஞர்; நான் பாமர மனிதன் ஆவேன். ஆனால் தவ.ஃ.ப்பீ என்ற சொல்லின் பொருளுக்கு முன்னால் அவர், பேச வார்த்தை ஏதுமின்றி திகைத்துப் போனார்.

தங்களது ஆயினயே கமாலாத்தே இஸ்லாம் என்ற அரபி நூலின் ஒரு மேற்கோளை அவருக்குக் காண்பித்தேன். அந்நூலின் உரைநடை அழகைக் கண்டு அவர் பிரமித்துப்

போனார். அல்லாஹ்வின் மீது ஆணையாக! ஓர் அரபியரால் கூட இதுபோன்று சொல் வன்மையுடன் எழுதவே முடியாத போது, ஓர் இந்தியரால் எவ்வாறு சாத்தியமாயிற்று? என ஆச்சரியத்தில் ஆழ்ந்தார். நான் தங்களது கஸீதாவை அவரிடம் கொடுத்தபோது, அது அவரது கண்களில் கண்ணீரை வரவழைத்தது. அதை அவர் படித்து விட்டு, தற்கால அரபிகளின் கவிதைகளை நான் ஒருபோதும் விரும்பியதில்லை எனும்போது இந்தியரைப் பற்றி என்ன கூறுவது! ஆனால் இந்தக் கவிதைகளை மனனம் செய்வேன் என்று இறைவன் மீது ஆணையிட்டுக் கூறினார்.

பிறகு, இதனை விட மேலான சொல்வன்மையுடன் அரபியர் ஒருவர் வாதிக்க நேர்ந்தாலும், அவர் சாபத்திற்குரியவரும், பொய் நபியான முஸைலமாவுக்கு ஒப்பானவராகவும்தான் இருப்பார் என அருதியிட்டுக் கூறினார். இத்துடன் எங்களது உரையாடல் நிறைவு பெற்றது. இக்கூற்றுக்கள், இறைவன் புறமிருந்தும், அத்தூயவனுடைய உதவியின் அற்புதங்கள் என்றும் நான் நம்புகிறேன். இது மனித செயல் அல்ல! எனது உயிருக்கும், மனைவி மக்களுக்கும் தாங்களே இனி எஜமானர் என்பதை நான் முடிவு செய்து விட்டேன்.

## அரபி அறிஞர் இந்த எளியவனுக்கு எழுதிய அன்பு மடல்

அளவற்ற அருளாளனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாகிய அல்லாஹ்வின் பெயரால் (துவக்குகிறேன்).

எவருடைய சிறப்புத்தன்மையின் அழகில் தென்றல் தன் இனிமையான சுருதியைக் கேட்க வைக்கிறதோ அத்தகைய மகத்தானவரே! பேரரளி, மல்லிகை மலர்களின் நறுமணத்தால் மணம் கமழ்கின்றவரே! தங்களின் உயர்தர அந்தஸ்து நுட்பத்திலும் நுட்பமான இரகசியங்களால் சூழ்ந்து காணப்படுகிறது. தாங்கள் காலத்தின் குழப்பங்களிலிருந்து இறைவனின் அடைக்கலத்தில் இருப்பீர்களாக! தங்களின் ஈடேற்றம் எனும் கப்பல்கள் ஞானங்களின் கடல்களில் எப்போதும் சென்று கொண்டிருக்கட்டுமாக! தங்களின் தலைமையின் கொடி சந்தேகங்களின் தடைகளை நீக்கு -வதற்காக எப்போதும் உயர்விலும் உயர்வாக பறக்கட்டுமாக! தங்களின் மகத்துவத்திற்கு முன்னால் எல்லா தலைகளும் குனிந்தவாறு இருக்கட்டுமாக! நாவுகள் தங்களைப் புகழ்வதில் சாட்சியாக இருக்கட்டுமாக! என்பதுமே எனது துஆ ஆகும். தங்களைப் புகழ்வது, தங்களுக்காக துஆ செய்வது, தங்களைச் சந்திப்பதற்கு விருப்பம் கொள்வது ஆகியவை எனது எடுத்துக் கூறும் சக்திக்கு அப்பாற்பட்டதாகும்.

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரக்காத்துஹூ.

சாந்தியுடன் உள்ள இந்த அன்பளிப்பு தூய உள்ளம் கொண்ட ஒருவரின் அன்பின் அடையாளமாகும். இதற்குப் பிறகு தெரிவிப்பது என்னவெனில், நம்பிக்கைகளின் தென்றல் காற்றும், நீண்ட பயணத்தின் வலிமை மிக்க எழுச்சியும், எழுதுபவனை வீட்டிலிருந்து வெளியேற்றி வீடற்றவனாக ஆக்கி விட்டது. மேலும் இறை நியதி எனும் அம்பு அந்த நாட்டிலிருந்து இந்த நாட்டில் தூக்கி எறிந்து விட்ட போது தற்செயலாக இறைவன் அதை அனுதாபமுள்ள நண்பர் ஹா.்.பிஸ் முஹம்மது ய.்.கூப் சாஹிப் அவர்களைச் சந்திக்கச் செய்தான். (அவரது ஆடை எப்போதும் இறைவனின் அருள்களால் நிரம்பி இருக்கட்டுமாக) அல்லாஹ் அவர்களை டெஹ்ராதூன் நகரில் குறைகள் எனும் சதுப்பு நிலத்தில் இருந்தும், பாவங்கள் எனும் அகழ்களில் வீழ்வதிலிருந்தும் பாதுகாப்பானாக.

எனவே நாங்கள் பரஸ்பரம் கருத்துப் பரிமாற்றங்களின் நிலைகளில் ஒருவருக்கொருவர் புரிதல்களைப் பெற்றுக் கொள்ள ஆரம்பித்தோம். மேலும் சென்ற கால கடந்த கால சம்பவங்களையும் சாட்சிகளையும் பற்றி பேச்சு வந்தது. எதுவரையென்றால், பேச்சு வார்த்தை நிகழ்காலம் வரை வந்து சேர்ந்தது. தங்களைக் குறித்த பேச்சு வந்தது. மேலும் நான் அவர்களிடம் (ஹா.்.பிஸ் முஹம்மது ய.்.கூப் சாஹிப்) தங்களைப் பற்றி தெளிவாகவும், விரிவாகவும் அறிய விரும்பினேன். அப்போது அவர்கள் எனக்கு தங்களைப் பற்றியும் தங்களின் தகுதி குறித்த உயரிய மகத்துவமிக்க புகழைப் பற்றியும் எடுத்துரைத்தார்கள். எதுவரையென்றால்,

தங்களின் உயர்ந்த நல்லொழுக்கங்களை செவிமடுத்ததன் காரணத்தால் எனது சிந்தனைகளின் எழுச்சியும் கவனமும் தங்களைப் பார்க்க வேண்டும் என்பதன் பக்கம் திரும்பியது. கூற்று என்பது கூறுபவருடைய பண்புகளின் கண்ணாடி ஆகும். மேலும் காண்பதாலும், சந்திப்பதாலும் கிடைக்கும் பயனை எவராலும் மறைக்க முடியாது. எனவேதான் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் அதற்கான துஆவைக் கேட்டார்கள். ஆனால் பயணத்தின் துன்பம், கோடை வெப்பத்தின் தாக்கம், பலவீனம், குறைவான பணம், வாகனம் இல்லாதிருப்பது ஆகியவை பயணத்திற்குத் தடையாக இருந்தன.

பறக்கும் ஆற்றல் இருந்திருந்தால்
ஆர்வமாய் நான் பறந்து
அங்கு நான் வந்திடுவேன்
தங்களைக் காணவே...!
முற்றிலும் பின்தங்கி
ஒருபோதும் இருந்திரேன்...!
ஆனால்,
சிறகொடிந்த பறவையாக
நானிருக்கிறேன் இப்போது - அதுவால்
பறக்கத்தான் இயலுமோ?

இந்த சந்திப்பு நேரடியாக இல்லாதிருந்தாலும் கடிதம் மூலமாகவே இருந்தாலும் சரியே! 'எழுதுகோல் என்பது இரண்டு நாக்குகளில் ஒரு நாக்கு ஆகும்' என்ற பழமொழி புகழ்பெற்றது. மேலும் கடிதம் பாதி சந்திப்பு ஆகும். ஆயினும்,

கேள்விப்பட்ட விஷயம் பார்ப்பதற்குச் சமம் ஆகாது. ஏனெனில் (பார்ப்பதாகிய) அது 'அய்னுல் யகீன்' ஆகும். ஆயினும் ஒருவருக்கு தண்ணீர் கிடைக்காதபோது அவர் அதற்கு பதிலாக கிடைப்பதன் பக்கம் கவனம் செலுத்துகிறார்.

வஸ்ஸலாம்.

## அரபி ஆலிமிடமிருந்து வந்த அன்பு மடலுக்கு இந்த எளியவனின் பதில்

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம். நஹ்மதுஹூ வனுஸல்லி அலா ரஸூலிஹில் கரீம்.

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரக்காத்துஹூ.

எனது அன்பிற்குரிய கலப்பற்ற தன்மை கொண்ட நேசம் காட்டுபவரே!

தங்களின் அன்பான மடல் எனக்குக் கிடைத்தது என்பது தெரியட்டுமாக. அதைத் திறந்து படித்த போது அதில் எழுதப்பட்டிருப்பதை நான் புரிந்து கொண்டேன். இது உள்ளத்தால் நேசம் காட்டுபவரும், இறையச்சம் கொண்டவரும், அறிவுக் கூர்மையுள்ளவரும், தூய்மை-யானவரும், அகப்பார்வை கொண்டவரும், கருத்து கூறத் தகுதி பெற்றவரும், அறிவாளியுமான ஓர் அன்பரின் கடிதம் என்று எனக்குத் தெரிந்தது. கு∴ப்ரின் ∴பத்வாக்களால் அடிபட்டவரும், ஒவ்வொரு சிறியவராலும், பெரியவராலும்

வெறுக்கப்பட்டவருமாகிய இந்த எளியவனுக்கு அந்த அன்பர் இக்கடிதத்தை எழுதியிருந்தார்.

எனவே, தங்களை எனது ஆறுதல் வழங்குபவராகவும், குறிப்பாக அரபிகளிலிருந்து அன்பு செலுத்துபவராகவும் ஆக்கியமைக்காக நான் அல்லாஹ்வுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலமாக அல்லாஹ் எனக்கு இத்தகைய நன்மக்களின் நேசத்தின் நறுமணத்தைப் பற்றிய நற்செய்தியை வழங்கியுள்ளான். மேலும் நான் அந்த நன்மக்களின் உதவியைப் பெறும் நம்பிக்கையுடன் அரேபியா, சிரியா ஆகிய நாடுகளுக்கு அனுப்புவதற்கான ஒரு நூலை எழுதியுள்ளேன். எனவே இந்த அருளுக்குரிய நாட்களில் தங்களின் கடிதம் கிடைத்த போது, நான் அதை அரபு நாட்டிலிருந்து கிடைக்கும் முதல் கனியாகக் கருதினேன். மேலும் இதை கிழக்கிலுள்ள -வர்களுக்கும் மேற்கிலுள்ளவர்களுக்கும் சீர்திருத்தத்திற்காக ஒரு நல்ல சந்தர்ப்பமாகவும் கருதினேன். மேலும் நான் தங்களைப் பார்க்கும் பொருட்டு அல்லாஹ் என்னை தங்களின் பூமிக்கு எடுத்துச் செல்வானாக என்று எனது உள்ளத்தில் ஆசை தோன்றியது.

எனது சகோதரரே! இந்த நாட்டின் ஆலிம்கள் என்னை கா.ஃபிர் என்று கூறி விட்டனர். மேலும் என்னைப் பொய்ப்படுத்தினர். மேலும் என் மீது பலவிதமான பழிகள் எனும் அம்புகளை எய்தனர். மேலும் என்னைப் பழித்துரைத்தனர். முட்டாள்தனமான பேச்சுக்களால் என்னை நிந்தித்தனர். மேலும் நான் அந்த ஆலிம்களின் மீதும், அவர்களின் அறிவின்

மீதும் வெறுப்படைந்திருக்கிறேன். மேலும் தமது இஸ்லாத்தில் சந்தேகம் கொள்கின்ற அவர்களைச் சென்று சந்தித்திருக் -கிறேன். தீய எண்ணம் கொள்வதிலும் உண்மையான வணங்கப்படுபவனுக்கு முன்னால் அட்டூழியம் செய்வதிலும் நான் அவர்களின் உள்ளங்களை யூதர்களின் உள்ளங்களைப் போன்று பார்க்கின்றேன்.

அவர்கள் என்னைக் கா.ஃ.பிர் என்று கூறுவதில் பிடிவாதமாக இருக்கிறார்கள். மேலும் எனக்குத் துன்பம் கொடுப்பதற்கு இயன்ற அளவுக்கு முயற்சி செய்கின்றனர். மேலும் ஓரிறைக் கொள்கை கொண்ட நம்பிக்கையாளரை எழுத்துக்களிலும் பேச்சுக்களிலும் அவர்கள் கா.ஃ.பிர் என்று குறிப்பிடுகின்றனர். மேலும் கு.ஃ.ப்ர் ஃ.பத்வா கொடுப்பதில் அவசரம் காட்டுவதில் வெட்கப்படுவதில்லை. இந்தக் காலம் மார்க்கத்தைச் சீர்திருத்த, ஷைத்தானை விரட்டியடிப்பதற்கான அத்தகைய சீர்திருத்தவாதி தோன்றும் காலம் அல்ல என்று அவர்கள் கருதுகின்றனர். அவர்கள் இருளைப் பார்ப்பதில்லையா? அது நன்மையின் மீது முழுமையாக படிந்து விட்டிருக்கிறது.

எதிரி, இஸ்லாத்தின் அரண் மீது தாக்குதலும், வழிப்பறிக் கொள்ளையும் செய்து கொண்டிருக்கிறான். மேலும் ஒளியின் இடத்தை இருள் பற்றிப் பிடித்துக் கொண்டது. அதன் மீது படர்ந்து விட்டது. மேலும் முக்கடவுளை வணங்கும் சமுதாயம் உலகில் பரவி விட்டது. மேலும் ஒரு பலவீனமான மனிதனை வணக்கத்திற்குரியவனாகக் குறிப்பிடுகிறது. மேலும்

அது தொலைவிலுள்ள, அருகிலுள்ள ஒவ்வொருவரையும் வழிகெடுக்கிறது. அவர்களிடம் ஏமாற்றுதல், பொய், அதிகமான செல்வம் ஆகியவற்றைத் தவிர வேறொன்றும் இல்லை. குருடரும், உலகவாதியும் அதன் பக்கம் ஈர்க்கப்படுகின்றனர். மேலும் கூட்டம் கூட்டமாக இறைவனுக்கு இணைவைத்தல் எனும் அவர்களது வலையில் சிக்கிக் கொண்டனர். இந்த விஷம் பெரும்பாலான முஸ்லிம்களையும் தனது பிடியில் சிக்க வைத்து விடலாம். மேலும் அவர்கள் இந்த ஏமாற்றுக்காரர்களின் கைகளில் மாய்ந்து போய் விடலாம்.

ஆகவே, அல்லாஹ் கருணையுள்ள இந்த உம்மத்தின் பக்கம் பார்த்தான். மேலும் அதை பலவீனமானதாகக் கண்டான். அப்போது அவன் மீண்டும் மார்க்கத்தைப் புதுப்பிப்பதற்காகவும் சான்றுகளை நிலைநாட்டுவதற்காகவும் தனது அடியார்களில் ஓர் அடியாரை அனுப்பினான். எனது சகோதரரே! இந்த நாட்கள் பயங்கரமான இருண்ட இரவைப் போன்றதாகும். மேலும் நேர்வழியின் எல்லா வழிமுறைகளும் அழிந்து விட்டன. எனவே அல்லாஹ் இந்தக் காலத்தின் குழப்பத்திற்கும், சோதனைக்கும் இடையில் இருள், கு∴ப்ர், கிளர்ச்சி ஆகியவற்றைக் கண்டான். மேலும் மக்கள் கொழுந்து விட்டு எரிகின்ற நெருப்பின் விளிம்பில் நிற்கக் கண்டான். அப்போது அவன் தன்னிடமிருந்து ஒரு விளக்கை வழங்கினான். மேலும் அது அவர்களை தடுமாற்றங்களிலிருந்து காப்பாற்றுகிறது. நபி (ஸல்) அவர்களின் நடைமுறையின் வழிகளையும் அடையாளங்களையும் அவர்களுக்கு ஒளிரச்

செய்கிறது. இஸ்லாம் பலவீனமடைந்திருப்பதைப் பார்த்து தங்களுக்கு உருக்கம் ஏற்பட வேண்டும் என்பதற்காக நான் இந்த துக்கங்களில் சில துக்கங்களை தங்களுக்கு முன்னால் எடுத்து வைத்துள்ளேன். நான் தங்களை நல்ல இளைஞராகவும், தூய மனம் கொண்டவராகவும், அன்பு கொண்டவராகவும் கருதுகிறேன். இந்த பலவீனமான, சமுதாயத்தின் விரட்டியடித்தல் மற்றும் தூற்றுதல் ஆகிய -வற்றிற்கு இரையான (எளியவனுக்கு) தாங்கள் தங்களின் அன்பான சொற்களால் ஆறுதல் வழங்கியுள்ளீர்கள்.

அல்லாஹ் தங்களுக்கு இதற்கான வெகுமதியை வழங்குவானாக. மேலும் தனது அருளை வழங்குவானாக. அவன் அனைவரையும் விட அதிக கருணை காட்டுபவன் ஆவான். ஆமீன்.

சமுதாயத்தால் கைவிடப்பட்டவனும்,
பலவீனமான அடியானுமாகிய
**குலாம் அஹ்மது**

## மக்காவிலிருந்து அரபு அறிஞர் ஒருவர் எழுதிய கடிதம்

அளவற்ற அருளாளனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாகிய அல்லாஹ்வின் பெயரால் துவக்குகிறேன்.

அனைத்து உலகங்களுக்கும் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்! அவனது அடியார்களில் தலைசிறந்தவராகிய ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் மீது அருளும் சாந்தியும் நிலவட்டுமாக!

மிகுந்த மேன்மைக்கும், கண்ணியத்திற்கும், அன்பிற்கும் உரிய எஜமானரும், எங்களது வழிகாட்டியும், தற்காலத்தின் மஸீஹும் ஆகிய ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது அவர்களுக்கு,

அல்லாஹ் தங்களைப் பாதுகாப்பானாக. ஆமீன். அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் தங்கள் மீது நிலவட்டுமாக.

நான் தங்களின் அன்பான கடிதம் கிடைக்கப் பெற்று, தாங்கள் நலமுடன் இருப்பதை அறிந்து அல்லாஹ்வுக்கு நன்றி கூறிய வண்ணம், அதை மிகுந்த கவனத்துடன் படித்தேன். எனது தவறுகளுக்காக நான் அல்லாஹ்விடமும் தங்களிடமும் மன்னிப்புக் கோருகின்றேன். என் தலைவரே! நான் உங்களது புதல்வனும், சேவகனும் ஆவேன். எனவே, அல்லாஹ்வுக்கும் தங்களுக்கும் பதில் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். நான் பாவமன்னிப்புத் தேடுகிறேன். அல்லாஹ் நாடினால், நான்

மீண்டும் அதே பிழையை ஒருபோதும் செய்ய மாட்டேன் என்றும், நான் முன்பு பேசியது போன்று இனி ஒருபோதும் பேச மாட்டேன் என்றும் நான் உறுதி அளிக்கிறேன். அல்லாஹ் தங்களது சூழ்நிலைகளை சிறந்ததாக ஆக்குவானாக. தங்களின் புறமிருந்து என் மீது செய்யப்பட்ட பேருபகாரங் -களுக்கு தனது வெகுமதிகளையும் அருட்களையும் தங்கள் மீது பொழிவானாக.

எழுதுபவன்
அடியார்களில் மிக அற்பமானவன்
**முஹம்மது பின் அஹ்மது மக்கி**

தங்களது நூலில் எழுதியுள்ள விஷயங்களினால், நான் பெரிதும் கவரப்பட்டேன். தங்களைச் சந்திப்பதற்கான வாக்குறுதியை அளித்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். தாங்கள் அல்லாஹ்வின் புறமிருந்து அனுப்பப்பட்டுள்ளீர்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. நான் தங்கள் மீது ஈமான் கொண்டுள்ளேன். தங்களை உண்மையாளராக ஏற்றுக் கொள்கிறேன். அனைத்து உலகங்களின் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் என மீண்டும் ஒருமுறை கூறிக் கொள்கிறேன்.

எழுதுபவன்
அடியார்களில் மிக அற்பமானவன்
**முஹம்மது பின் அஹ்மது மக்கி**

## அரேபியாவைச் சேர்ந்த ஷரீஃப் முஸ்தஃபா சாஹிப் அவர்களது மகன் செய்யிது அலி சாஹிப் எனும் ஓர் அரபு அறிஞர் எழுதிய கடிதத்தின் சுருக்கம்

அரபு நாட்டிலிருந்து செய்யிது சாஹிப் அவர்கள் எனக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதியிருந்தார். அதில் புகழ்ச்சி, பாராட்டு -களால் நிறைந்த ஏராளமான கவிதை வரிகளும், உரைநடை வடிவில் எழுதப்பட்ட பத்திகளும் இருந்தன. அவருடைய நீண்ட சொற்றொடர்களிலிருந்து கீழ்வருபவை அவரது கடிதத்திலிருந்து எடுக்கப்பட்ட ஒரு மேற்கோளாகும்.

“அன்பிற்குரிய மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிப் அவர்களுக்கு,

மதி நுட்பமுடைய, தொலை நோக்கு பார்வை கொண்ட, அறிவார்ந்த, கற்றறிந்த, கிழக்கின் விடிவெள்ளியாகத் திகழ்கின்ற, இறைவனின் தூதர், அவனது வஹியைப் பெறுபவர், இஸ்லாமிய உலகின் நிலையான தூண், முஸ்லிம்களின் அரசர் ஆகிய உங்களுக்கு ஸலாம். எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்.

உங்களது மேன்மை, ஒளியூட்டும் நட்சத்திரங்களுக்கு ஒப்பானதாகும். அவை உலகில் ஒவ்வொரு மூடருக்கும் அறிவாளிக்கும் காணக்கூடிய வகையில் பிரகாசிக்கிறது. நீங்கள் மன்னிக்கும் மனப்பான்மை, பெருந்தன்மை ஆகியவற்றின் முடிவுறா கடல். ஞானங்கள் மற்றும் மன்னிப்பின் எத்தகைய ஊற்று எனில், அவை அதன் அடி ஆழம் வரை மிகத் தூய்மையானதாகும்.”

பின்னொரு சந்தர்ப்பத்தில், இந்த அரபி அறிஞர் எழுதிய கஸீதாவையும், முழு கடிதமும் அச்சாகி வெளியிடப்படும். இப்போதைக்கு சாட்சிக்காக இந்த அளவு போதுமானது.

## டாக்டர் மார்ட்டின் கிளார்க் சாஹிப் மற்றும் கிறித்தவர்களின் பிரதிநிதியான திரு. அப்துல்லாஹ் ஆத்தம் விவாதத்தில் வீழ்த்தப்படும் நிலையில், இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதாக அவர் அளித்த வாக்குறுதி

முன்னாள் கூடுதல் உதவியாளரும், இப்போது ஓய்வூதியதாரரும், அமிர்தசரஸின் முக்கிய பிரமுகருமான அப்துல்லாஹ் ஆத்தம், முஸ்லிம்களுடனான விவாதத்தில், டாக்டர் மார்ட்டின் கிளார்க் மற்றும் ஜன்டியாலா கிறித்தவர் -களின் பிரதிநிதியாக இருந்தபோது அளித்த வாக்குறுதியை நாம் இங்கு அப்படியே வெளியிடுகிறோம். தர்க்கரீதியான விவாதத்தில், அவர் தோற்கடிக்கப்பட்டால் அல்லது ஏதேனும் அடையாளம் அவருக்குக் காண்பிக்கப்பட்டால் அவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதாக மிகவும் தெளிவாக ஒப்புக் கொண்டார். அது இதுவாகும்:

## திரு. அப்துல்லாஹ் ஆத்தம் சாஹிப் மே 9, 1893 அன்று அமிர்தசரஸிலிருந்து எழுதிய கடிதத்தின் நகல்

காதியானின் தலைவராகிய மிர்ஸா குலாம் அஹ்மது அவர்களுக்கு,

தாங்கள் 'ஹுஜ்ஜத்துல் இஸ்லாம்' என்ற நூலில் எழுதியதற்குப் பதில் அளிக்கும் விதமாக, நான் பகிரங்கமாக அறிவிப்பது என்னவெனில், நீங்கள் அல்லது வேறு யாரேனும் திருக்குர்ஆன் இறைவனால் அருளப்பட்டது என்றும், இறை பண்புகளுக்கு இணக்கமாக அது எவ்வித மாற்றத்திற்கு உள்ளாகாமல் இருக்கிறது என்பதையும், தெளிவான அற்புதங்கள் அல்லது அறிவுப்பூர்வமான வாதங்கள் ஆகியவற்றின் மூலம் நிரூபித்துக் காட்டினால், நான் முஸ்லிமாக மாறி விடுவேன் என நான் உறுதி அளிக்கிறேன். எனது இந்தக் கடிதத்தைப் பத்திரமாக தங்கள் கையில் வைத்திருங்கள். ஆனால், நான் இது தொடர்பான அறிவிப்பை செய்தித்தாளில் வெளியிடாதிருந்தால் என்னை மன்னிக்கவும்.

கையொப்பம்

**அப்துல்லாஹ் ஆத்தம்**

## அப்துல் ஹக் கஸ்னவி வெளியிட்ட பிரசுரத்திற்கு பதில் அளிக்கும் விதமாக முபாஹலாவிற்கான ஓர் அழைப்பு

வெளியிடப்பட்ட நாள்: ஷவ்வால் 26, ஹிஜ்ரி 1310

நான் சமீபத்தில் ஹிஜ்ரி 1310 -ல், ஷவ்வால் 26 அன்று அப்துல் ஹக் கஸ்னவி எனக்கு முபாஹலா அறைகூவல் விடுத்ததைப் படித்தேன். எனவே, அவருக்கும் நிராகரிப் -பாளனாகக் கருதும் பகட்டு அறிஞர்களிடமும், போலி மவ்லவிகளிடமும் நான் இந்த முபாஹலாவை ஏற்றுக் கொள்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அல்லாஹ் நாடினால், ஹிஜ்ரி 1310, துல்க.்.தா மாதம் 3 அல்லது 4-ல் நான் அமிர்தசரஸ் வந்து விடுவேன். முபாஹலா நடப்பதற்கான நாள் 10 துல்க.்.தா எனத் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. ஆனால் மழை அல்லது வேறு எதிர்பாராத சூழ்நிலைகளினால் ஒருநாள் இது தாமதப்படுத்தப்படலாம். இக்காரணங்கள் தவிர்த்து, மேலும் காலம் தாமதிப்பதற்கு அனுமதி கிடையாது. இந்த முபாஹலா மர்ஹூம் கான் பஹாதுர் முஹம்மது ஷாஹ் பள்ளிவாசலுக்கு அருகிலுள்ள ஈத் பெருநாள் தொழுகை மைதானத்தில் வைத்து நடைபெறும். இஸ்லாத்தின் உண்மை குறித்து கிறித்தவர்களுடன் முற்பகலில் ஏறக்குறைய 12 மணி வரை இந்த எளியவனின் விவாதம் நடைபெறும். மேலும் இந்த விவாதம் தொடர்ச்சியாக பன்னிரண்டு நாட்கள் நடைபெறும். நான் ஒவ்வொரு நாளும் முற்பகலில் பங்கெடுக்க இருப்பதால், என்னை நிராகரிப்பாளன் என்று கருதுவோரும், முபாஹலா அறைகூவலை ஏற்க விரும்புவோரும், அதே நாட்களில் பிற்பகல் இரண்டு மணியில்

இருந்து மாலை நேரம் வரை நான் முபாஹலாவிற்காக தயாராக இருப்பேன் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். எனவே ஹிஜ்ரி 1310 துல்க.்.தா 10-ல் அல்லது காலதாமதம் ஆகும்பட்சத்தில், துல்க.்.தா 11-ல் (என்னை எதிர்ப்பவர்கள்) என்னுடன் முபாஹலா செய்ய வரலாம். துல்க.்.தா 10-ஆம் நாள் தீர்மானிக்கப்பட்டதன் ஞானம் என்னவெனில், நான் கலிமா மொழிந்தும், கிப்லா நோக்கித் தொழுதும் இந்த ஆலிம்கள் என்னை நிராகரிப்பாளனாகக் கருதுகின்றனர். எனவே இந்த ஆலிம்களுக்கும், மேற்குறிப்பிட்ட நாளில் இந்த முபாஹலாவில் பங்கு பெற வாய்ப்பு கிடைக்கும். அவர்களின் பெயர்கள் பின்வருமாறு:

முஹையுத்தீன் (லக்கு, ஹரியானா), மவ்லவி அப்துல் ஜப்பார் சாஹிப், ஷேக் முஹம்மது ஹுஸைன் பட்டாலவி, முன்ஷி சஅதுல்லாஹ் (ஆசிரியர், உயர்நிலைப்பள்ளி, லூதியானா), அப்துல் அஸீஸ், (போதகர் லூதியானா), முன்ஷி முஹம்மது உமர் (முன்னாள் ஆட்சிப்பணியாளர், லூதியானா), மவ்லவி முஹம்மது ஹஸன் சாஹிப் (லூதியானாவின் தலைவர்), மியா(ன்) நஸீர் ஹுஸைன் சாஹிப் (டெல்லி), பீர் ஹைதர் ஷாஹ் சாஹிப், ஹா.்.பிஸ் அப்துல் மன்னான் (வஸீராபாதி), மியா(ன்) அப்துல்லாஹ் டோங்கி, மவ்லவி குலாம் தஸ்தகீர் (கஸூரி), மவ்லவி ஷாஹ் தீன் சாஹிப், மவ்லவி முஷ்தாக் அஹ்மது சாஹிப் (ஆசிரியர், உயர்நிலைப்பள்ளி, லூதியானா), மவ்லவி ரஷீத் அஹ்மது (கங்கூஹி) மவ்லவி முஹம்மது அலி, போதகர் (போப்ரான், குஜ்ரான்வாலா), மவ்லவி முஹம்மது இஸ்ஹாக் மற்றும்

சுலைமான் (பட்டியாலா), ஸஹுரூல் ஹஸன் (சஜாதா நஷீன்[3] பட்டாலா), மவ்லவி முஹம்மது (லாகூர் கரம் பக்ஷ் பிரிண்டிங் பிரஸ் பணியாளர்).

பதிவுத் தபால் மூலம் அவர்களுக்கு அனுப்பப்பட்ட நமது பிரசுரங்களைப் படித்த பிறகும் இவர்களில் எவராவது முபாஹலாவில் பங்கெடுப்பதிலிருந்து ஒருவேளை பின்வாங்கினால், அவர்கள் பொய்யர்கள் என்பதற்கும், அவர்களது மார்க்கத் தீர்ப்புகள் (கு.ஃப்ர் பத்வாக்கள்) அநீதியானவை என்பதற்கும் அவர்களது பின்வாங்குதலே போதுமான சான்றாகும். இவர்களில் மிகவும் முன்னணியில் இருப்பவர் இஷாஅத்துஸ் ஸுன்னா பத்திரிகையின் ஆசிரியர் முஹம்மது ஹுஸைன் பட்டாலவி ஆவார். அவர், இந்த முபாஹலாவில் பங்கேற்க அந்தக் குறிப்பிட்ட தேதியில் அமிர்தசரஸுக்கு அவசியம் வர வேண்டும். ஏனென்றால், அவரோடு முபாஹலா செய்வதற்கு அவரே என்னை அழைத்திருந்தார். இதுபோன்ற முபாஹலாக்களை நான் மீண்டும் மீண்டும் செய்ய விரும்பவில்லை என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். ஏனென்றால், மிக சாதாரணமாக எடுத்துக் கொள்ளும் அளவில் முபாஹலா என்பது விளையாட்டானதோர் அற்ப விஷயம் அல்ல. இப்போது அனைத்து மறுப்பாளருக்கும் முடிவு செய்யப்பட்டு விட வேண்டும். எனவே, இந்தப் பிரசுரம் வெளியிடப்பட்ட பின்னரும், எவரெல்லாம் இந்த அழைப்பை ஏற்க மறுத்து,

3. சஜாதா நஷீன் - பட்டாலாவில் மார்க்கப் பெரியவராகக் கருதப்பட்ட ஒரு நபர் - வெளியீட்டாளர்.

நிர்ணயிக்கப்பட்ட தேதியில் ஆஜராகவில்லையோ, அத்தகையோருக்கு வருங்காலத்தில் மீண்டும் முபாஹலா அறைகூவலை விடுப்பதற்கு எவ்வித உரிமையும் இல்லை. மேலும் அவர் வெட்கமற்றவர்களைச் சார்ந்தவராவார்; மறைவிடத்தில் இருந்து கொண்டு, கா∴பிர் என்று கூறக் கூடியவராக இருப்பார். எனவே, சான்றை முழுமைப்படுத்தும் பொருட்டு, (எனது எதிரிகள்) எவ்வித சாக்குப்போக்கும் சொல்ல காரணமும் இருக்கக் கூடாது என்பதற்காக இந்த அறிவிப்பை ஏராளமான நகல் எடுத்து பதிவுத் தபால் மூலம் அனுப்பியுள்ளேன். இதற்குப் பிறகும் அவர்கள் முபாஹலாவில் கலந்து கொள்ளவில்லை என்றாலோ, என்னை நிராகரிப்பாளன் என்று கூறுவதை விட்டும் தவிர்ந்து கொள்ளவில்லை என்றாலோ, அதுவே இவ்விவகாரம் முடிவுக்கு வந்து விட்டதன் அடையாளமாக இருக்கும்.

இறுதியாக, நிராகரிப்பாளனாக என்னை கருதுவோருக்கு, நான் ஒரு முஸ்லிம் என்பதை நிரூபிக்க முபாஹலாவை ஆரம்பம் செய்யும் முன், அங்கு கூடியுள்ள கூட்டத்தினர் முன்பு ஒரு விளக்கச் சொற்பொழிவு நிகழ்த்துவது எனது உரிமையாகும் என்பதை நான் இங்கு கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

நேர்வழியைப் பின்பற்றுவோர் மீது சாந்தி நிலவட்டுமாக!

அறிவிப்புச் செய்தவர்
**மிர்ஸா குலாம் அஹ்மது**
30 ஷவ்வால் ஹிஜ்ரி 1310

## இறுதிச் சான்று

ஷேக் முஹம்மது ஹுஸைன் பட்டாலவி, ஹிஜ்ரி 1310 துல்க∴தா 10-ஆம் நாளன்று நடைபெற இருக்கும் முபாஹலாவில் பங்கு பெறாவிட்டால், என்னை நிராகரிப்பாளன் என்று அழைத்ததற்காக பாவமன்னிப்புக் கோருவார் என்ற அவரைப் பற்றிய முன்னறிவிப்பு நிறைவேறி விட்டதாக முடிவு செய்யப்படும். நிறைவாக, நான் இத்தகைய வார்த்தைகளால் இறைவனிடம் பிரார்த்திக்கின்றேன்.

ஆற்றல்மிக்க இறைவா! தீங்கிழைப்போர், வரம்பு மீறுவோர், குழப்பம் விளைவிப்போரை சாபத்திற்கு உள்ளாக்குவாயாக! மேலும் இந்த முபாஹலா அழைப்பு மற்றும் வரையறுக்கப்பட்ட நகரம், இடம் மற்றும் காலத்திற்குப் பிறகும் முபாஹலாவுக்காக எனக்கெதிரில் களத்தில் வராமலும், என்னை கா∴பிர் என்று கூறுவதிலிருந்தும், கொடுஞ்சொல் ஏச்சுப் பேச்சுக்களிலிருந்து விலகி இருக்காதோர் மீதும் சாபமிடுவாயாக. மேலும் அவமானம் அடைந்து தோல்வியுறச் செய்வாயாக! ஆமீன் சும்ம ஆமீன்!

என்னை நிராகரிக்கின்றவர்களே! இறைவனும் அவனது திருத்தூதர் (ஸல்) அவர்களும் நிராகரிப்போரை அமைதிப்படுத்த வகுத்துள்ள விஷயத்தின்பால் வாருங்கள்.

---

என்னுடைய முபாஹலா அறைகூவலை ஏற்பதற்காக என்னை நிராகரிப்பாளர் எனப் பிரகடனப்படுத்தும் அனைத்து ஆலிம்களையும் ஹிஜ்ரி 1310 துல்க∴தா 10-ஆம் நாளன்று அமிர்தசரஸ் வருமாறு நான் அழைக்கின்றேன். (ஆசிரியர்)

மாறாக, இதைச் செய்யாமல் நீங்கள் புறக்கணித்துத் திரும்பி விட்டால், இறைவனின் சாபம் நிராகரிப்பாளர்களின் மீது விழும் என்பதையும், அவர்களின் அச்சமும் பின்னடைவும் அவர்கள் பொய்யர்கள் என்பதற்கு சான்றாகும் என்பதையும் அறிந்து கொள்ளுங்கள்.

அறிவிப்புச் செய்தவர்

**மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி**